பக்கங்கள்; எட்டு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 12 புதன்கிழமை (28-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 193

# பத்தாயிரம் தெற்கு இளைஞர்களை வடக்கே அனுப்பும் திட்டம் வாபஸ்!

## தமிழ்க் கட்சிகளின் நெருக்குதலால்

கொழும்பு, ஓகஸ்ட் 28

தென் பகுதியில் இருந்து பத்தாயிரம் இளைஞர்களைத் திரட்டி, அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி, அவர்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிவில் மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கு அனுப்பும் தனது திட்டத்தை அரசாங்கம் கைவிட்டு விட்டது.

தமிழ்க் கட்சிகள் கொடுத்த நெருக்குதல்கள் காரணமாகவே அரசு தனது திட்டத்தைக் கைவிட்டது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஈ. பி. டி. பி. உட்பட பல்வேறு தமிழ்க் கட்சிகள் இந்தத்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தன என்பது தெரிந்ததே.

திட்டத்தை அரசு கைவிட்டு விட்டது என்பது பற்றிய தகவலை ஈ. பி. டி. பியினருக்கு அரசு தெரிவித்திருப்பதாக சில தமிழ் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

எனினும் ஈ. பி. டி. பி. பிரதிநிதிகள் குழு ஒன்று இவ்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் விமானசேவை இன்று மீண்டும் ஆரம்பம்

சுமார்ஒரு மாதகாலமாகத் தடைப்பட்டிருந்த யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை இன்று மீண்டும்ஆரம்பிக்கப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று செல்லும் விமானத்தில் 40 பயணிகள் செல்ல உள்ளனர்.

தெற்கில் இருந்து வந்து இங்கு சிக்கியிருந்த 15 அரச ஊழியர்களும் இவர்களில் அடங்குகிறார்கள்.

இவர்களின் விவரங்களையும் சிவில் அலுவலகம் நேற்று மாலை வெளியிட்டது.

அந்த 15 அரச ஊழியர்களின் பயண விண்ணப்ப இலக்கங்கள் வருமாறு:-

6624, 4049, 6561, 7647, 5537, 6825, 5010, 8005, 1905, 2361, 8688, 4454, 8913, 6262, 9879.

பயணம் செய்வோரை இன்று காலை 8 மணிக்கு யாழ். மத்தியகல்லூரிக்கு பயண ஒழுங்குடன் வருமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-3)

### கான்ஸ்டபிள், சிவிலியன் பலி! 14பேர் காயம்

# வவுனியாவுக்குள் புலிகள் ஊடுருவித் தாக்குதல்!

## ஊரடங்குச் சட்டம் அமுல்

கொழும்பு, ஓக. 28

நேற்றுக் காலை வவுனியா நகருக்குள் ஊடுருவி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், பொதுமகன் ஒருவரும் உயிரிழந்தனர். மூன்று ஊர்காவலர்களும் ஐந்து பொலீஸாரும், இரு இராணுவத்தினரும் உட்பட 14 பேர் காயமடைந்தனர்.

இலங்கை வானொலி இத்தகவலை வெளியிட்டது.

கைகுண்டுகளையும், துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

பொலீஸ் மற்றும் இராணுவ வாகனங்களும் பொதுமக்களின் வாகனங்களும் சேதமடைந்ததாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களில் ஒருவர் ''புளொட்''

(8ஆம் பககம் பார்க்க)

# ஐ.தே.க வுடன் பேசி பயன் எதுவும் இல்லை

## கூட்டணித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28

ஐ.தே. கட்சியுடன் தீர்வுத் திட்டம் தொடர்பாகத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்தவித பயனும் இல்லை அரசாங்கம் விரைவில் தீர்வுப் பொதியை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் வடக்கு - கிழக்கு இணைப்பு ஓர் அவசியமான விடயம்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான தீர்வுக்கு ஒரேவழி முஸ்லிம் மக்களின் ஆதரவு தான்.

அதன் காரணமாக முஸ்லிம் மக்களின் பெருமளவு ஆதரவைப் பெற்ற கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம்.

ஐ. தே. க. வுடன் நாம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதில் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3)

# சசிகலாவுடனான உறவு துண்டிப்பு ஜெயலலிதா நேற்று அறிவிப்பு

## சுதாகரன் தனது வளர்ப்பு மகனும் அல்லவாம்

சென்னை, ஓக. 28

முன்னாள் முதலமைச்சரும் அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா, தமது நெருங்கிய தோழி சசிகலா நடராஜனுடனும் அவரது குடும்பத்தினருடனும் தமக்கு இருந்து வந்த தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துக் கொள்வதாக நேற்று அறிவித்தார்.

இது குறித்து நேற்று சென்னையில் அறிக்கை ஒன்றையும் செல்வி ஜெயலலிதா வெளியிட்டார்.

கட்டுமான கால கட்டங்களில் உற்ற தோழியாக திருமதி சசிகலா நடராஜன் இருந்தார் என்ற நன்றி உணர்வு இருக்கிறது என்றும் —

கட்சித் தொண்டர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்கவும் —

கட்சியின் நலனையும் எதிர்காலத்தையும் முக்கியமானது எனக் கருதியும் — தாம் இந்த முடிவை எடுத்திருப்பதாக அவர் அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. க. கூட்டத்தில் கண்ணீர்ப்புகைக் குண்டு

கொழும்பு, ஓக. 28

மத்துகம தனியார் பஸ் நிலையத்தில் கடந்த ஞாயிறன்று நடந்த ஐ. தே. க பொதுக்கூட்டத்தில் இடம் பெற்ற குழப்பத்தை அடக்குவதற்காக பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு பிரயோகஞ் செய்தனர்.

சுமார் ஆறாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த சமயம் அங்கு வந்து சேர்ந்த அரசுத் தரப்பு ஆதரவாளர்கள் டயர்களைப் போட்டு எரித்தும் கற்களை வீசியும் கூட்டத்தைக் குழப்ப எத்தனித்ததாக கொழும்புப் பத்திரிக ஒன்று செய்தி வெளியிட்டது.

இதனையடுத்து ஐ தே. க. ஆதரவாளர்களும் திருப்பித் தாக்கியதை அடுத்து கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமான கூட்டம் ஐ. தே. க. தேசியப் பட்டியல் எம்.பியான டாக்டர் ரஜித் சேனரத்ன உரையாற்றிக் கொண்டிருந்தபோது — இரவு 7.30 மணியளவில் குழப்பத்தில் முடிவுற்றது.

(உ)

## தொண்டமான் இந்தியா பயணம்

கொழும்பு, ஓக. 28

இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார்.

(இ-3)

# புலிகளுடன் தொடர்புடையவர்கள் தாமாகச் சரணடையக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 28

''பயங்கரவாதச் சம்பவங்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் அல்லது முன்னர் தொடர்பு வைத்திருந்தவர்கள் தாமாகவே படையினரிடம் சரணடைந்து தங்கள் தொடர்புகள் மற்றும் பங்குபற்றி தாமாக முன்வந்து ஒப்புக்கொண்டு விட்டால் வீணான கைதுகள், தடுத்து வைத்தல் போன்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்; அவருக்கும் அது உரிய பாதுகாப்பை வழங்கும். எனவே இத்தகையோர் தாமாக முன்வந்து சரணடைய வேண்டும்.''

— இவ்வாறு பகிரங்கக் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ அதிகாரி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## தென் கொரியாவின்

# முன்னாள் ஜனாதிபதிக்கு மரண தண்டனை விதிப்பு

சோல், ஒக. 27

தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி சண்டுகுவானுக்கு நீதிமன்றம் மரண தண்டனை வழங்கி உள்ளது.

1979, 1980ஆம் ஆண்டுகளில் இராணுவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது தொடர்பாக சண்டு குவான் மீது நீதிமன்றத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டிருந்தன. இராணுவச் சதிக்கு திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அவரது முன்னாள் சக இராணுவ அதிகாரியும் பின்னர் ஜனாதிபதியாக பதவி ஏற்றவருமான நோட்டே ஊ என்பவருக்கு எவரும் எதிர் பார்க்காதவிதத்தில் குறைந்த தண்டனையாக 22 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சண்டு குவான் நாட்டுக்கு ஆற்றிய பணிகள் தலைமை நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. இவரது காலத்திலேயே தென் கொரியா ஐ. நாவில் அங்கத்துவம் பெற்றது.

சண்டு குவானுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றுவதற்கு பொது மக்களின் ஒப்புதலைப் பெற வேண்டியுள்ளது எனவும் —

1980இல் பேரணியில் சென்ற பலர் மீது மேற்கொள்ளப்பட்ட மனிதப்படுகொலைகள் தொடர்பான குற்றச் சாட்டிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு அரசியல் பழிவாங்கல் என 3 முன்னைநாள் ஜனாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கை முன்னைநாள் ஜெனரல்கள் அடங்கிய நீதிமன்றம் விசாரணை செய்தது. விசாரணையின் இறுதி வாரத்தின்போது அரசவாதி தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றுக்கு சமுகமளிக்கவில்லை.

(இ-10)

## இஸ்லாமிய கூலிப்படை காஷ்மீருக்குள் ஊடுருவல்

### இந்தியா குற்றச்சாட்டு

ஸ்ரீநகர் ஒக. 27

காஷ்மீர் சட்டசபைத் தேர்தலைக் குழப்பும் நோக்கத்துடன் இஸ்லாமிய கூலிப் படைகளை பாகிஸ்தான் காஷ்மீருக்குள் அனுப்பி உள்ளது. எந்தவித அச்சுறுத்தல்கள் இருந்தாலும் தேர்தலை நடத்தியே தீருவோம்.

இந்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூலிப்படைகளை காஷ்மீருக்குள் அனுப்பும் நோக்கத்துடன், அவர்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பாகிஸ்தான் படைகள், இந்திய படைகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அவர் கூறினார்.

## சார்ல்ஸ் - டயானா விவாகரத்து அறிவிப்பு

### நாளை வெளிவரும்

லண்டன், ஒக. 27

இளவரசர் சார்ள்ஸ் — இளவரசி டயானா விவாகரத்து நாளை புதன்கிழமை அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

நட்ட ஈடாக டயானாவுக்கு சுமார் 10 ஆயிரம் இலட்சம் இந்திய ரூபா மதிப்புடைய ஸ்ரேலிங் பவுண்டுகள் வழங்கப்படுகின்றன.

இளவரசர் சார்ள்ஸ் இந்த விவாகரத்தின் பின் கமின்லா பாக்கரை முறைப்படி திருமணம் செய்து கொள்வார் என வதந்திகள் உலாவுகின்றன.

இங்கிலாந்து மக்கள் கமின்லா பாக்கரை ஒருக்காலும் இளவரசியாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என பத்திரிகைகள் எழுதியுள்ளன. அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் ஜோண் ரேய்லர் கூறுகையில், கமின்லா பாக்கர் இளவரசி என்பதை மக்கள் சகித்துக் கொள்ளவே மாட்டார்கள் என்றார்.

[இ- 4]

## 20 சட்டமன்றஉறுப்பினர்கள் பாகிஸ்தானில் ராஜினாமா

### பெனாசிருக்கு எதிர்ப்பு

பாகிஸ்தானில் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோவுக்கு எதிராக நடைபெற்ற மாபெரும் பேரணியின்போது, 20 வடமேற்கு எல்லை மாகாணங்களின் சட்டமன்ற உறுப்பினர்களும் அவாமி தேசிய கட்சியின் 8 உறுப்பினர்களும் தாங்கள் பதவி விலகுவதாக அறிவித்தனர்.

பெஷாவரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாபெரும் பேரணியின் போது இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

பெனாசிர் பூட்டோ அரசுக்கு எதிராக ஆரம்பிக்கப் பட்ட நாடு தழுவிய எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள 15 எதிர்க் கட்சிகள் இந்த பேரணிக்கு ஏற்பாடு செய்தன.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவர் நவாப் ஷெரீப் இந்த எதிர்க்கட்சி முன்னணிக்கு தலைமை வகிக்கிறார்.

பேரணியில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் அரச எதிர்ப்பு கோஷங்களிடையே இந்த பதவி விலகல் கடிதங்கள் வழங்கப்பட்டன.

பெனாசிர் பூட்டோவின் அரசு நீடிப்பதை எதிர்த்தே இந்த பதவி விலகல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

(இ 4)

## உலக அரங்கில்

### அணு ஆயுத நாடாக மாறும் நோக்கங் கிடையாது

#### இந்திய அமைச்சர் தெரிவிப்பு

அணு ஆயுத நாடாக மாறுவதோ அல்லது பிராந்தியத்தில் அணு ஆயுதப் போட்டியில் ஈடுபடுவதோ இந்தியாவின் நோக்கம் அல்ல.

இந்தியாவின் வெளி விவகார அமைச்சர் இண்டர் குமார் குஜ்ரால் புதுடில்லியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

ஜெனிவாவில் சமர்ப்பிக்கப் பட்ட விரிவான அணுஆயுதத் தடை நகல் ஒப்பந்தத்தை இந்தியா தனது வீட்டோ அதிகாரம் மூலம் தடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1974 ஆம் ஆண்டு இந்தியா தனது அணு ஆயுத திறனை வெளிக்காட்டி இருந்தது.

எனினும் அணு ஆயுத நாடுகள், அவற்றை அழிக்காமல் தமது பாதுகாப்புக்கருதி தொடர்ந்து வைத்திருக்கும் வரை இந்தியா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடாது என்றும்அவர் கூறினார்.

### புறூண்டியில் 6 ஆயிரம் பேர் கொலை

கடந்த ஜூலை 25 ஆம் திகதிய புரட்சியின் பின்னர் புறூண்டியில் ஆறாயிரம் மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டி உள்ளது.

# முல்லைத்தீவு தாக்குதலை அடுத்து வீடு செல்லவுள்ள ஜெனரல் யார்?

> முல்லைத்தீவு தாக்குதல் தொடர்பாக ''சமுராயி'' என்பவரால் எழுதப்பட்டு ''லக்பிம'' சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைப் பறிகொடுத்ததை ஒரு தற்காலிக பின்னடைவாக மாற்றிய விடுதலைப் புலிகள், தமது போர் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய மேற்கொண்ட முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலின் மூலம் மீண்டும் ஒரு வெற்றிப் பாதையை அமைத்துக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதை நிரந்தர வெற்றியெனக் கருதிய அரச பாதுகாப்புப் படையினர், அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குஅமைய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப்போய் முல்லைத்தீவு முகாமைப் பறிகொடுக்கும் அளவிற்கு பின்னடைவுகளைச் சந்தித்தனர்.

முல்லைத்தீவு முகாம் மீது புலிகளால் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலை ஏற்றுக் கொள்ளத் தைரியமில்லாமல் குழம்பிப்போன அரசும் ஒரு சில இராணுவத் தலைவர்களும் தங்கள் இயலாமையை மறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

யுத்தம் தொடர்பான உண்மை நிலையை வெளியிட்ட பத்திரிகையாளர்கள் மீது குற்றத்தைச் சுமத்தி, எல்லாப் பொறுப்புக்களில் இருந்தும் விடுபட அவர்கள் முயற்சிக்கின்றனர். எனினும் இளைய அதிகாரிகளும், சிப்பாய்களும் உண்மை நிலையை அறிவர்.

தணிக்கை என்ற போர்வையில், யுத்தத்தின் உண்மை நிலையை பொது மக்களுக்கு மறைப்பதற்காக அரசு முயன்ற போதிலும், போர்க்களத்திலிருந்த சிப்பாய்கள் அனைத்தையும் அறிந்திருந்தனர்.

போர்க்களத்தில் எதிரியை நோக்கி முன்னேறிச் சென்று நேருக்கு நேர் சண்டையிட்டு எதிரியை அழிப்பது சிப்பாய்களும் கப்டன் பதவிக்குட்பட்ட அதிகாரிகளுமே ஆவர்.

அங்கு எதிரியின் தாக்குதலுக்கு உட்பட்டு பெருமளவில் உயிர் துறப்பதும் அவர்களேயாகும்.

பல சந்தர்ப்பங்களில், மூத்த அதிகாரிகள் யுத்தத்தை நெறிப்படுத்துவது இளைய அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் பின் புறத்திலிருந்தே என்பது வெளிப்படை.

### உயர் அதிகாரிகள் எங்கே?

எதிரி தீரத்துடன் நேருக்கு நேர் மோதும் சண்டைகளில் நிலைமை மேற்கண்டவாறு இருப்பினும், எதிரி தந்திரோபாயமாக பின்வாங்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் மூத்த அதிகாரிகள் முன்னணிக்கு வந்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

இதற்கு உதாரணமாக யாழ்ப்பாணம் மீதானமற்றும் கிளிநொச்சி மீதான நடவடிக்கைகளைக் காட்டமுடியும்

குடாநாட்டில் நடத்தப் பட்ட சூரியப் பிரகாசம் 1, 2, 3, இராணுவ நடவடிக்கைகள் வன்னியில் மேற்கொள்ளப்படும் உண்மை வெற்றி இராணுவ நடவடிக்கைகள் அனைத்திலும் பங்குபற்றிய ''கொமாண்டோ'' படைப் பிரிவைச் சேர்ந்த கப்டன் ஒருவர் ''எதிரி இராணுவத்தை நேருக்கு நேர் சந்திக்காமல் பின்வாங்கிய'' யாழ்ப்பாணம் மீதான இராணுவநடவடிக்கைகளின்போது வீடியோ கமெராவுக்கு முன் தோன்றி போர்க்களத்தின் முன்னணிக்குச்சென்ற ஜெனரல்கள், பிரிகேடியர்கள், கேணல்கள்ஆகியோரை ''கிளிநொச்சி மீதான நடவடிக்கையின் போது காண முடியவில்லை.'' என்றார்.

முல்லைத்தீவு முகாமிலிருந்து கைப்பற்றிய பீரங்கிகள் மற்றும் ஏனைய ஆயுதங்களைப் பயன்படுத்தி கிளிநொச்சி மீதான இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் அதி உச்ச முயற்சிகளை மேற்கொண்டனர் என அந்தக் கப்டன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றாமல் தடுப்பதற்காக விடுதலைப்புலிகள் அவ்வாறான உக்கிரத் தாக்குதலை மேற்கொண்ட வேளையில், மேலே குறிப்பிட்ட மூத்த அதிகாரிகள் எவரும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட 'சூரியபிரகாசம்' நடவடிக்கையின் போது களத்தின் முன்னணிக்குச் சென்றது போல் அங்கு வரவில்லை. கீழ்த்தரத்தைச் சேர்ந்த படையினர் மட்டுமே தங்களுக்குத் தெரிந்தவிதத்தில் போரிட்டனர். அவர்களுக்கு கட்டளைகளை வழங்கி வழிநடத்த மூத்த அதிகாரிகள் (ஜெனரல்கள், பிரிகேடியர்கள்) எவரும் இருக்கவில்லை.

### புலிகள் கைப்பற்றிய பீரங்கிகள்

முல்லைத்தீவுத் தாக்குதலின் போது அந்த முகாமில் இருந்த இரு பீரங்கிகள் விடுதலைப்புலிகளிடம் சிக்கின என கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய பத்திரிகைகள் இரண்டிற்கு விடுத்த அறிக்கையில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா கூட ஒப்புக்கொண்டுள்ளார்.

அவ்வாறெனில், அந்தப் பீரங்கிகளின் தாக்குதல்கள் காரணமாக, கிளிநொச்சி மீதான இராணுவ நடவடிக்கையின் போது படையணிகள் முன்னேற முடியாமல் மீண்டும்பரந்தனுக்குப்பின்வாங்கிப் போனதுடன் நடவடிக்கையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது பற்றி பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கு பிரிகேடியர் சரத் முனசிங்காவினால் ஏன் வெளிப்படுத்த முடியவில்லை என அந்தக் கப்டன் கேள்வி எழுப்புகிறார்.

### உண்மைகளை மறைப்பது கடமையா?

இராணுவப் பேச்சாளர் யுத்தம் தொடர்பான உண்மைகளை மக்களுக்குத் தெரிவிக்காமல் மறைப்பது அவரது கடமையின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும்.

இராணுவத்தில் உயர் பதவிகளில் உள்ளவர்கள் அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தி அவர்களைத் தம்வசமாக்கிக் கொள்வதற்காக யுத்தத்தைப் பொய்யாக மேற்கொள்ளும் போது இராணுவப் பேச்சாளர் அந்தப் பொய்யை உண்மையென உலகுக்கு எடுத்துக் கூறவேண்டும். அவருக்குக் கொடுக்கப்பட்ட கடமை அதுவே.

எனினும் போர் தொடர்பான செய்திகளை தணிக்கை என்ற பெயரில் அவர் மக்களுக்கு எப்படித் தெரிவித்தாலும் போரில் ஈடுபட்டுள்ள

(5 ஆம் பக்கம் பார்க்க)

# காடுகள் ஊடாக நாள் கணக்கில் நடந்து வவுனியா வரும் மக்கள்!

## சிறுவர்கள், வயோதிபர்கள் உணவின்றிப் பாதிப்பு

வவுனியா ஒக. 28

கிளிநொச்சியில் இடம்பெயர்ந்த மக்கள் இப்போது பெரும் எண்ணிக்கையில் வவுனியாவுக்கு வந்து சேருகின்றனர்.

இவர்களில் பலரும் 45 அல்லது 50 மைல் தூரத்தை அடர்ந்த காடுகளினூடாக நடந்தே வருகின்றனர். பகலும் இரவுமாக நான்கு, ஐந்து நாள்கள் நடந்தே தாம் இங்கு வந்து சேர்ந்ததாக அவர்களில் பலரும் தெரிவித்தனர்.

தமது கடும் பயணத்தின் போது சாப்பிட முடியாததால் சிறுவர்களும், வயோதிபர்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றனர்.

தம்மைத் தொடர்ந்து மேலும் ஆயிரக்கணக்கானோர் வவுனியாவுக்கு வருவார்கள் என்று முதலில் வந்து சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

தாம் கிளிநொச்சியிலிருந்து வவுனியா வரும் போது விடுதலைப் புலிகள் தங்களைத் தடுக்கவோ மறிக்கவோ இல்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தாண்டிக்குளத்துக்கு அப்பால் மக்கள் தங்குமிட வசதிகள் இல்லாமல் வானத்தையே கூரையாகக் கொண்டு நாள்களைப் போக்குகின்றனர் அங்கு போதிய உணவு மற்றும் மருந்து வகைகள் கிடைப்பது பெரும் அரிதாக உள்ளது. — என்று வவுனியா வந்து சேர்ந்த பலரும் தெரிவித்தனர்.

இவர்களில் பலரும் தாம் வலிகாமத்தில் இருந்து முதலில் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து பின்னர் கிளிநொச்சியில் அக்கராயன், மல்லாவி வட்டக்கச்சி, முறிகண்டி, பகுதிகளுக்குச் சென்று தங்கியிருந்ததாகத் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா நகருக்கு. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வரும் அகதிகள், இதற்கென ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில், நலனோன்பு நிலையங்களில் தங்க வைக்கப்படுகின்றனர்.

இவர்கள் தாம் தங்கியுள்ள முகாம்களில் இருந்துவெளியே எங்கும்செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. பொலீஸார் இவர்களின் நடமாட்டத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

இவர்களின் அத்தியாவசிய தேவைகள் முகாம்களிலேயே விநியோகிக்கப்படுகின்றன. பாதுகாப்பு அமைச்சின் வழி நடத்தலுக்கு ஏற்பவே இவர்களின் நடமாட்டம் பொலீஸாரால் கண்காணிக்கப்படுகிறது — என்று உயர் அதிகாரி ஒருவர் இங்கு தெரிவித்தார். (அ)

## அதிகாரிகளைச் சந்திக்க திங்கட்கிழமையும் ஒதுக்கீடு

கொழும்பு. ஒக. 28

அரசாங்க மற்றும் கூட்டுத்தாபன அலுவலகங்களில் புதன்கிழமைகள் மட்டுமல்லாது திங்கட்கிழமைகளும் பொது மக்கள் தினமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மாகாண சபையின் கூட்டுறவுத்துறை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் இது தொடர்பாக அறிவித்துள்ளார்.

அதிகாரிகளை பொது மக்கள் சந்திப்பதற்கு வாரத்தில் புதன்கிழமை மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதால் அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றுவோர் மக்களுக்குப் பூரணமாகச் சேவையாற்ற முடியாதநிலை உருவாகியுள்ளது என்றும்—

இந்த நிலைமையை அகற்றுவதற்காகவே திங்கட்கிழமையும் மக்கள் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. என்றும் தெரிவிக்கப்படுகிறது.(இ-4)

## பாடசாலைகள் 2 ஆம் தவணை விடுமுறை

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ் மாவட்டப் பாடசாலைகள் யாவும் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமையுடன் 2 ஆம் தவணை விடுமுறைக்காக மூடப்படும் என்று வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அறிவித்துள்ளார்.

ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைகள் நடைபெறும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் அடுத்தமாதம் 16 ஆம் திகதியும்—

ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைகள் நடைபெறும் பாடசாலைகள் அடுத்தமாதம் 25 ஆம் திகதியும் — மீள ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## செஞ்சிலுவை அடையாளம் அழிப்பு

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பாதுகாப்பின் கீழ் முன்னர் இருந்த சமயம் யாழ். போதனா வைத்தியசாலையைச்சூழ அடையாளம் இடப்பட்டிருந்த செஞ்சிலுவை அடையாளங்கள் தற்போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் முற்றாக அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வைத்திய சாலையின் பாதுகாப்பு விலக்கப்பட்ட பின்னர், இந்த அடையாளங்கள் அழிந்தும், அழியாமலும், சேதமுற்றும் காணப்பட்டன.

தற்போது இந்த அடையாளங்களை மூடி வெள்ளை வர்ணம் பூசப்பட்டு அவை முற்றாக மறைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## குறைப்பு

தென்மராட்சி தனியார் பஸ் சங்கத்தினர், சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து சேவையிலீடுபடுத்தும் பஸ்களின் பயணக் கட்டணம் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது,

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ரூபா ஒன்பதும் பளைக்கு ரூபா பதினான்கும் ஒருவழிக் கட்டணமாக அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதம் ரூ. 3,500 சம்பளம்

## 10 ஆயிரம் பேருக்கு தொழிற் பயிற்சி!

### அரசாங்கம் புதிய திட்டம்

கொழும்பு - ஒக 28

பட்டதாரிகளுக்கும் மற்றும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்காக மொத்தம் 10 ஆயிரம் பேருக்கு தொழிற் பயிற்சிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறு சேர்க்கப்படுவோருக்கு தனியார் துறையில் பயிற்சி வழங்கப்படும்.

அரசாங்கமும் தனியார் துறையினரும் இணைந்து இப்பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும், ஏற்கனவே பல தனியார் துறை நிறுவனங்கள் இதற்கு தமது சம்மதத்தைத் தெரிவித்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்படும் பத்தாயிரம் பேருக்கும் இரண்டு ஆண்டுகள் பயிற்சி வழங்கப்பட்டு பின்னர் அவர்கட்கு வேலை வழங்கப்படும்,

இத் திட்டத்தின் கீழ் மூவாயிரம் பட்டதாரிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். ஏனையோர் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிலிருந்து தெரிவாவர்.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுவோருக்கு பயிற்சிக் காலத்தின் போது மாதமொன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா வேதனமாக வழங்கப்படும். இதில் 2 ஆயிரம் ரூபாவை அரசும் மிகுதி ஆயிரத்து; 500 ரூபாவை தனியார் துறையும் வழங்கும்.

இத்திட்டத்தை ஆரம்பிக்க அரசு 3 கோடி ரூபாவை ஒதுக்கவுள்ளது (இ-4-10)

## யாழ். பிரதம தபாலகத்துக்கு மற்றொரு தொலைபேசி இணைப்பு பெற முயற்சி

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ். பிரதம தபாலகத்துக்கு மேலும் ஒரு தொலைபேசி இணைப்பை பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ளப் படுகின்றது என பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள தொலைபேசி இணைப்பு மூலம் தொலைபேசியைப் பயன்படுத்த பெரும் எண்ணிக்கையான மக்கள் தபாலகத்திற்கு வருகின்றனர் என்றும்—

இவர்கள் அனைவரும் அவசர தேவைக்கு தொலைபேசியைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர் என்றும்— அவர் குறிப்பிட்டார்.

தற்சமயம் — நாளொன்றுக்கு 12 பேர் மட்டுமே தொலைபேசி மூலம் வெளியூருக்கு தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

அதுவும் பதிவு செய்து நான்கு அல்லது ஐந்து தினங்களுக்குப் பின்னரே அவர்களுக்கு இது வழங்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-5)

மல்லாவிக்கு

## இடம்பெயர்ந்த மக்களுக்கு செஞ்சிலுவைக்குழு உதவி

யாழ்ப்பாணம், ஒக. 28

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாவிப் பகுதியில் வாழும் குடும்பங்களில் அவசர உதவிகள் தேவைப்பட்ட ஏழாயிரம் குடும்பங்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உதவிகளை வழங்கியுள்ளது.

இந்தகுடும்பங்களுக்கு பாய், சமையற் பாத்திரம், படுக்கை விரிப்பு, கூரைச் சீற்றுக்கள் ஆகியவற்றை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழங்கியுள்ளது.

அத்துடன் மல்லாவி, துணுக்காய் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான படுக்கை விரிப்புகள், பாய்கள் ஆகியவற்றையும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழங்கியுள்ளது. (இ - 3)

## நான் கைதாகியிருந்தால் நடப்பது தெரிந்திருக்கும்

### ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 28

''என்னைக் கைது செய்யச் சொல்லுங்கள் என்ன நடக்கும் என்று அப்பொழுதுதான் தெரியும்.''

ஐ. தே. க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான, ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''பட்டலந்த'' வதை முகாம் சம்பவங்கள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்படலாம் என கடந்த வாரம் வதந்திகள் பரவின.

அவரைக் கைது செய்யும் நோக்கம் அரசுக்கில்லை என அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மூலமாக ஜனாதிபதி சந்திரிகா செய்தி அனுப்பியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக கொழும்புப் பத்திரிகை நிறுவனம் ஒன்று ரணில் விக்கிரமசிங்கவிடம் தொலைபேசியில் விசாரித்த போது —

''நான் கைது செய்யப்படலாம் என்ற தகவல் எனக்கும் கிடைத்தது. சில பத்திரிகைகளில் இச் செய்தி வெளியாகியிருந்தது. என்னைக் கைதுசெய்யச் சொல்லுங்கள். என்ன நடக்குமென அப்போதுதான் தெரியும். செய்யவேண்டியவை பற்றி கைது செய்யப்பட்ட பின்னர் தீர்மானிப்போம்'' என அவர் தெரிவித்தார். [இ-10]

## கொழும்புக்கு அனுப்பிய வெங்காயம் அழுகிவிட்டது

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஏற்றிச் செல்லப்பட்ட வெங்காயத்தில் ஒரு பகுதி அழுகிச் சேதமடைந்துவிட்டது.

தனியார் மூலம் கப்பலில் இந்த வெங்காயம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

மேற்படி வெங்காயம் லொறியில் சில தினங்கள் வைக்கப் பட்டே கப்பலில் ஏற்றப்பட்டு கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது.

கப்பலும் சில தினங்கள் தரித்து நின்றே கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றது என்றும்—

கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டபோது வெங்காயத்தில் ஒருதொகுதி அழுகிப் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் யாழ்.செயலகம் அடுத்த மாதம் இரு பெரும் தொகுதிகளாக 40 ஆயிரம் அந்தர் வெங்காயத்தைக் கொள்வனவு செய்து கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்குத் தீர்மானம் எடுத்துள்ளது.

செப்ரெம்பர் 15ஆம் திகதி 20 ஆயிரம் அந்தர் வெங்காயமும் —

30 ஆம் திகதி 20 ஆயிரம் அந்தர் வெங்காயமும் கொள்வனவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், கூட்டுறவுச் சங்கம் மற்றும் தனியார் மூலம் யாழ் செயலகம் வெங்காயக் கொள்வனவில் ஈடுபடும் என யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆயிரம் ரூபாவுக்கும் ஆயிரத்தி இருநூறு ரூபாவுக்கும் இடையில் வெங்காயம் கொள்வனவு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்; [5]

## வேலைவங்கி மூலமே யாழ். தபால் வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஒக, 28

யாழ். தபால் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்கள் யாழ். செயலக வேலைவங்கி மூலமே நிரப்பப்படவிருக்கின்றன.

தபால் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்களை வடபிராந்திய பிரதி தபால் மா அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் கோரியிருந்தார்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டமையை ரத்து செய்து, செயலக வேலை வங்கி மூலம் ஆட்களைத் தெரிவு செய்ய தற்போது முடிவாகியுள்ளது.

இதற்காக தகுதியுள்ள 100 பேரின் விவரப்பட்டியலைத் தருமாறு அவர் யாழ். அதிபரைக் கோரியுள்ளார். (இ-3-5)

# பரந்தன் தாக்குதல் பின்னணி!

## சில சுவையான தகவல்கள்

முல்லைத்தீவில் தரையிறங்க முற்பட்ட படைகள் மீது புலிகள் தாம் கைப்பற்றிய 122MM பீரங்கியால் தாக்குதல் தொடுத்தனர். அவ்வெறிகணை சற்றுக் குறி தவறி ஒரு தரையிறங்கு கலத்தின் (LCM) சாய்வுப் பகுதியில் (Ramp) வீழ்ந்தது அவ்விடத்திலேயே 28 படையினர் பலியாகினர்; மேலும் பலர் காயமடைந்தனர். இவ்வெறிகணை தரையிறங்கு கலத்தில் நேரடியாகவே விழுந்திருந்தால் அதில் இருந்த 400படையினரும் இறந்திருப்பர் என இராணுவத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் முகாமைக் காப்பாற்ற அனுப்பப்பட்ட படைகளில் முன்னூறுக்கு மேற்பட்டோர் காயங்களுக்குள்ளானதாலும் நூறுக்கு மேற்பட்டவர்கள் இறந்ததாலும், புலிகளின் எதிர்ப்பு மிக உக்கிரமாக இருந்தமையாலும் படைத்தலைமை முல்லைத்தீவிலிருந்து முற்றாக இலங்கை இராணுவம வெளியேறுவதே புத்திசாலித்தனம் எனத் தீர்மானித்தது.

இதற்குச் சற்று முன்னர் தான் ''நாம் எப்பாடு பட்டாயினும் முகாமை தொடர்ந்து நம் கட்டுப்பாட்டில் வைத்திருப்போம்'' எனப் பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்திருந்தார்.

### சுவாரஸ்யமான சம்பவங்கள்

இதேவேளை ஜனாதிபதி நாடு திரும்பிய பின் அவசர அவசரமாகக் கூட்டப்பட்ட பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் (Security Council) பல சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்தேறின.

உடனடியாக ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி நிலைமையை நாட்டுக்கு விளங்கப்படுத்தவேண்டும் எனச் சந்திரிகா இக்கூட்டத்தில் தெரிவித்ததாகவும் இதற்கு ரத்வத்தை முதலில் அவ்வளவு இணக்கம் தெரிவிக்கவில்லையெனவும், பின்னர் ஜனாதிபதியின் கடும் வற்புறுத்தலின் பேரிலேயே மாநாட்டைக் கூட்டியதாகவும் தெரிகிறது.

புலிகள் தமது படைகள் அனைத்தையும் முல்லைத்தீவுப்பகுதியில் திரட்டிவைத்திருக்கிறார்கள் எனவும் அவர்களை அங்கேயே 'வளைத்துப் போட்டு அடிகக' இதுவே மிகச் சிறந்த சந்தர்ப்பமெனவும், இப்படிச் செய்துவிட்டால் புலிகளை முடித்துக் கட்டிவிடலாம் எனவும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஜெனரல் ரத்வத்தை ஒரு மகா புத்திசாலித்தனமான திட்டத்தை தெரிவித்திருக்கிறார்.

களநிலைமைகள் பற்றியோ, வன்னி நிலப்பரப்பைப் பற்றியோ, போரியலின் அடிப்படைகளையோ தெரியாத ஜனாதிபதி இதை ஒரு நல்ல திட்டமாக ஏற்று அதையே மந்திரி சபைக் கூட்டத்திலும், ஒரு பொதுக் கூட்டததிலும் அரசின் பதிலடித் தந்திரோபாயமாக விளக்கினார். இது பத்திரிகைகளிலும் வெளியாயிற்று.

இதைப் பார்த்து ஓரளவு விவரமறிந்த இராணுவ ஆய்வாளர் பலரும் ஐயகோ! இது என்ன முட்டாள்தனம்'' என தலையிற் கையை வைத்தனர்.

முல்லைத்தீவிலிருந்து முற்றாக இராணுவம் வெளியேறி விட்ட நிலையிலும் —

புலிகளின் கையில் பலம் வாய்ந்த ஆயுதங்கள் சென்று விட்ட நிலையிலும்—

ஆனையிறவினூடாக ஒரு தரைவழிப்படை நகர்வு என்பதைக் கற்பனை கூடப் பண்ணிப்பார்க்க முடியாத ஒரு நெருக்கடியிலும் —

இருந்த படைகளுக்கு ரத்வத்தையின் இச்கூற்று கவலைக்கிடமான ஒன்றாகப் பட்டதில் வியப்பில்லை.

### தலைகுனிவை சரிக்கட்டும் முயற்சி

எனினும் ரத்வத்தைக்கு முல்லைத்தீவுத் தோல்வி மாபெரும் தலைகுனிவு. அதைஎப்படியாவதுசரிக்கட்டிதான் மீண்டும் ஒரு வெற்றி வீரனாகத்தன் கௌரவத்தை நிலை நாட்டிட வேண்டும் என்பதே பிரதான குறி. 'ரிவிரச' நடவடிக்கையின் பின்னர் தன்னை ஒரு ஜெனரலாக பதவியுயர்த்திக் கொண்டமையாலும், தன் ஆதரவாளர்கள் ஊடாக தன்னை சப்புமல் குமாரயாவாக பிரபலப்படுத்திக் கொண்டதாலும், ரத்வத்தைக்கு முல்லைத்தீவு ஒரு ஜீரணிக்க முடியாத தன்மானப் பிரச்சினையாகிவிட்டது.

வழக்கமான இராணுவ நடைமுறைகள், சம்பிரதாயங்களைப் புறக்கணித்தே ரத்வத்தை தன்னை ஒரு ஜெனரலாகப் பதவியுயர்த்திக் கொண்டார் என்பதும் இதைப் பலரும் சற்று ஏளனமாக நோக்கினர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. ''மகியாவை (ஐ. தே. க.) கவுன்சில் உறுப்பினராக இருந்த உம்மை கேணல் ஆக்கியது என் தாயார். பின்னர் ஜெனரலாக்கியது என் தமக்கை. இப்போது முல்லைத்தீவைப் பறிகொடுத்ததற்காக பிரபாகரன் உம்மைப் பீல்ட் மார்ஷலாக்க வேண்டும்'' என நாடாளுமன்றத்தில் அவசரகால சட்ட விவாதத்தின் போது அனுரா ரத்வத்தையைக் கிண்டல் பண்ணிப் 'பேசியதையும் அதைப் பத்திரிகைகள் வெளியிட்டதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

எனவே இந்த மானப் பிரச்சினையின் பின்னணியிலேயே நாம் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சியை நோக்கிப் புறப்பட்ட படை நகர்வை நோக்க வேண்டும்

### பெயர் மாற்றம்

இதற்கு ஆரம்பத்தில் 'ஹெல பல' அதாவது 'சிங்கள சக்தி' எனப் பெயரிடப்பட்டிருந்தது பின்னர் அவசர அவசரமாக 'சத்ஜய' எனப் பெயர் மாற்றப்பட்டு விட்டது. பரந்தன் வரை படைகள் சற்றுத் துரிதமாக எதிர்ப்பின் மத்தியிலும் முன்னேறின. பரந்தன் சந்திக்குச் சற்று வடக்காக உள்ள பெயர்ப் பலகை அமைந்துள்ள பகுதி கைப்பற்றப்பட்டது பரந்தன் பெயர்ப் பலகைக்குப் பக்கத்தில் படைகள் நிற்கின்ற படம் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு வெளியாயிற்று. பீரங்கி மற்றும் விமானக்குண்டு வீச்சு என்பவற்றின் மூலம் கிளிநொச்சியும் அதை அண்டிய பகுதிகளும் தரைமட்டமாக்கப்பட்டன.

''நாம் விரைவில் கிளிநொச்சியைக் கைப்பற்றுவோம். அதன்பின் எமது அடுத்த குறி வவுனியா செல்லும் பாதையை எமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதேயாகும்'' என ரத்வத்தை 'ஐலண்ட்' பத்திரிகைக்குக் கூறியிருந்தார். ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இதன் காரணமாக வன்னியிலிருந்து வவுனியா நகருக்குள் வருவர் என எதிர்பார்த்து வடபகுதி புனர்வாழ்வு அதிகாரசபை அங்கு 35 பாடசாலைகளைக் கையேற்று ஒழுங்குகள் செய்யத்தொடங்கிற்று.

### அரசின் கணக்கு

ஆரம்பத்தில் இதை மிக இரகசியமாகச் செய்வதே நோக்கமாக இருந்தது இதனாலேயே கிளிநொச்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு உணவு அனுப்புவதற்கு இராணுவம் தடை விதித்தது. பட்டினி போட்டால் கிளிநொச்சி – வவுனியாப் பிரதான பாதை படையினரின் கட்டுப்பாட்டினுள் வந்ததும் வாடி வதங்கும் மக்கள் புலிகளை நிராகரித்து வவுனியாவில் அரச கட்டுப்பாட்டை நாடி ஓடி வந்து விடுவார்கள் என்பதே அரசு போட்ட கணக்கு எனத் தெரிகிறது. அப்படி மக்கள் வெளியேறி விட்டால், புலிகளின் பாடு திண்டாட்டம் ஆகும் என்பதும் படையினரின் எண்ணம்.

இவற்றின் மூலமாக வீழ்ந்த தன் இராணுவ கௌரவத்தை ஒரு வகையாகத் தூக்கி நிறுத்தி ஒரு சிங்களத் தேசிய மாவீரனாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் ஐ. தே கவினரின் கேலிக்கும் சேட்டைகளுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைக்க ''சத்ஜய'' உதவும் என்பதும் ரத்வததையின் எதிர்பார்ப்பு.

ஆனால் நடந்தது என்ன?

பரந்தனிலிருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேற முற்பட்ட படைகளுக்கு விழுந்தது கடும்அடி. சில தாங்கிகள் (Main Battle Tanks) முற்றாக நாசமாகின. முல்லைத்தீவிலிருந்து எடுத்த நீண்ட தூர எறிகணைச் செலுந்திகளைக் கொண்டுவிடாது தாக்கினர், புலிகள். ஒரு சில மிகத் தீவிரமான நெருங்கிய மோதல்களும் இடம்பெற்றன.

கிளிநொச்சியின் தரையமைப்பு தமக்குச்சாதகமில்லாமல் இருப்பதாலேயே சேதம் பலமாக இருப்பதாக இராணுவத்தினர் கூறலாயினர். அப்பகுதியின் வாய்க்கால் அமைப்பை தமக்கு மிகச்சாதகமாகப் பயன்படுத்தி மோதுகின்றனர் புலிகள் எனவும் கூறப்பட்டது.

கரடிப்போக்குச் சந்தியை அடைந்து விடலாம் என எண்ணிய படைகள் வடமேற்காக உள்ள உமையாள்புரம் பகுதியை நோக்கிப் பின்வாங்க வேண்டியதாயிற்று அப்பகுதியை நோக்கியும் புலிகளின் கடும் எறிகணைத் தாக்குதல் தொடர்ந்தது.

### காதில் பூ

இந்தநிலையில் தான்'எமது நோக்கம் கிளிநொச்சியைக் கைப்பற்றுவது என்றில்லை. நாம் வேறு தந்திரோபாயத்தின் அடிப்படையில் செயற்படஉள்ளோம்' என இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்கா கூறத்தொடங்கினார். இவரது கூற்று காதில் பூச்சுற்றுகிற வேலை என்ற தொனிப்பட(Bluffing) ஒரு சர்வதேசச் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

முல்லைத்தீவால் உண்டாகிய அரசியல் நெருக்கடியையும் அது ரத்வத்தையின் சிங்களத் தேசிய மாவீரனாகும் கனவிற்கு வைத்த ஆப்பையும் சரிக்கட்டவே 'சத்ஜய' மேற்கொள்ளப்பட்டது என்பது கண்கூடு. இதற்குப்பலிக்கடாவாகியது ஏழைச் சிங்களப் படை வீரரும் பல திறமையுள்ள இளநிலைப் படையதிகாரிகளுமே என தென்னிலங்கையில் உள்ள விடயமறிந்த முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலர் கூறுகின்றனர். ★

> கொழும்பிலிருந்து வெளியாகும் ''சரிநிகர்'' பத்திரிகையின் ஓகஸ்ட் 15 — ஓகஸ்ட் 28 இதழில் 'டி.சி.' என்பவர் முல்லைத்தீவை மூடி மறைக்க முனையும் பரந்தன் தாக்குதல்'' என்ற தலைப்பில் வரைந்த கட்டுரை மறு பிரசுரமாகின்றது. இதனை வரைந்த டி.சி. ஆங்கிலத்தில் ''தராக்கி'' என்ற பெயரில் இராணுவ விமர்சனக் கட்டுரைகளை வரையும் தமிழரான ''டி. சிவராம்'' ஆக இருக்கக் கூடும். (ஆ-ர்)

# இந்தியாவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் எண்ணமே கிடையாது!

## மேலும் அகதிகள் குவிவதைத் தவிர்ப்பதே இந்தியாவின் பிரச்சினை

புதுடில்லி ஒக 28

''இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத்திருப்பியனுப்புவது என்ற பேச்சே இப்போது இல்லை. அது ஓடி மறைந்து விட்டது. முன்னரைப் போல் அகதிகள் தொகை ஆயிரக் கணக்கில் பெருகாதிருப்பதை உறுதி செய்வதே இந்தியத் தரப்பினரின் இப்போதைய அக்கறையாகவுள்ளது.''

இந்தியாவில் இருந்து வெளிவரும் ''இந்து'' பத்திரிகை மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது —

இலங்கையில் இருந்து கடல் கடந்து தமிழகத்துக்கு மீண்டும் அகதிகள் வந்து கொண்டிருப்பதை இந்திய மத்திய அரசாங்கம் அரசியல், இராணுவமற்றும்வெளியுறவுக் கொள்கை மட்டங்களில் பாரதூரமான விடயமாகக் கருதுகிறது.

இன்றைய நிலையில் இலங்கைத் தமிழர்களை நாடு திருப்பியனுப்ப முடியாது என்பதால் அகதிகளுடன் சேர்ந்து தமிழ்த் தீவிரவாதிகள் ஊடுருவாதிருப்பதை உறுதிசெய்து கொள்வதே இப்போது இந்தியாவுக்கு முக்கியமான கைங்கரியமாகத் தோன்றுகிறது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் காணப்படும் உணர்வுபூர்வமான தன்மையையும், அகதிகள் மேலும் தமிழகத்துக்கு படையெடுக்கக்கூடிய சாத்தியப் பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் —

அகதிகள் வருகையைக் கட்டுப் படுத்த வேண்டிய தேவையை இலங்கை அரசாங்கத்துக்கு வலியுறுத்தி உணர்த்த இந்திய அரசாங்கம் விரும்புகிறது.

### உள்விவகாரம்

இலங்கையின் நிகழ்வுகள் முற்று முழுதாக அந்நாட்டின் ''உள்விவகாரமே'' என்ற நிலைப்பாட்டையே தொடர்ந்து கொண்டிருக்கும் இந்தியா, இனநெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளில இலங்கை அரசாங்கம் வெற்றி பெற வேண்டும் என்றும் விரும்புகிறது. ஜனாதிபதி சந்திரிகா மற்றும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் ஆகியோர் மேற்கொண்ட இந்திய விஜயங்கள் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தியிருக்கின்றன.

அத்துடன் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதில்லை என்ற புதுடில்லியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட வாய்ப்பும் கிடையாது.

### இயலாமை

இலங்கை அரசாங்கம் புதிதாக அதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருக்கும் பகுதிகளில் உள்ள குடிமக்களை பாதுகாக்கவோ அல்லது புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களைக் கட்டுப் படுத்தவோ முடியாத ஒரு நிலையில் இருப்பதாக புதுடில்லி உணருகிறது.

முல்லைத்தீவிலும், கொழும்பிலும் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வுகளும் வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறும் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த குடிமக்களுக்கு உணவுப் பொருள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# கொப்பேகடுவ குழுவினர் உயிரிழந்தமைக்கு புலிகளின் கண்ணிவெடியே காரணம்!

## ஆனால் ஆணைக்குழுமுன் நிபுணத்துவ சாட்சியம் மறைப்பு

கொழும்பு, ஒக. 23
''லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் அவருடன் சேர்ந்த உயரதிகாரிகள் உயிரிழந்த குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு நிலத்துக்குக் கீழ் புதைக்கப்பட்டிருந்த — விடுதலைப்புலிகளின் — கண்ணிவெடியே காரணம்; அவர் பயணம் செய்த வாகனத்தில் குண்டு பொருத்தப்பட்டிருந்தது என்று கூறுவதற்கான தொழில் நுட்ப சாட்சியங்கள் ஏதும் இல்லை''.

இப்படித் தெளிவாகக் குறிப்பிட்டு இந்தச் சம்பவம் குறித்து சோதனை நடத்திய விசேட வெடிகுண்டு நிபுணர் சமர்ப்பித்த நிபுணத்துவ அறிக்கை கடந்த 18 மாதங்களாக ஆணைக்குழு விசாரணைகளில் சமர்ப்பிக்கப்படாமல் மறைக்கப்பட்டிருப்பது ஏன்?

— இவ்வாறு ''த சண்டே லீடர்'' பத்திரிகை கேள்வி எழுப்பியிருக்கின்றது.

1992 ஆகஸ்ட் 8 ஆம் திகதி அராலித்துறையில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவும் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளும் உயிரிழந்தது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தின் பின்னணி குறித்து விசாரிப்பதற்காக விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்றதும் நியமித்தார்.

அந்த ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதியரசர் திஸ்ஸபண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டார். ஆணைக்குழு உறுப்பினர்களிடையே ஏற்பட்ட இழுபறியை அடுத்து குழுவின் ஏனைய உறுப்பினர்களான மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசரான டி. பி. எஸ். குணசேகராவும் மேல் நீதிமன்ற நீதிபதியான காமினி அமரதுங்கவும் ஆணையாளர் பதவியிலிருந்து கௌரவமாக விலகிக் கொண்டனர்.

இதன் பின்னர் — இக்குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து நிபுணத்துவ விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கேணல் டெஸ் மண்ட் டபிள்யூ ஜே. ரட்மோர் என்ற வெடிகுண்டு நிபுணரை ஆணைக்குழு அமைத்தது.

அவருக்கான விமானப் போக்குவரத்துக் கட்டணம், ஹோட்டல் மற்றும் செலவுகள் என சுமார் 16 இலட்சம் ரூபாவை அரசு செலவிட்டது.

பின்னர் அரச செலவில்— விமானம் மூலம்— குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்த அராலித்துறைக்கு அந்த நிபுணர் அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் திஸ்ஸ பண்டாரநாயக்கா முன்னிலையில் பரீட்சார்த்த வெடிகுண்டுச் சோதனை உட்பட பல்வேறு சோதனைகளையும் ஆய்வுகளையும் கேணல் ரட்மோர் மேற்கொண்டார். சம்பந்தப்பட்ட சிலரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டன.

அங்கு தெளிவாக மேற்கொண்ட பரிசோதனைகளின் பின் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்த தனது விசேட அறிக்கையை கேணல் ரட்மோர் சமர்ப்பித்தார்.

அதில் இடம்பெற்றிருந்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

1. அதிசக்தி வாய்ந்த— நிலத்துக்குக் கீழ் புதைக்கப்பட்டிருந்த வெடிப்பொருள் வாகனத்தின் பின் இடதுபுறச் சில்லுக்குக் கீழ் வெடித்தமையே அந்த வாகனத்தில் இருந்தவர்கள் பலியாகவும் காயமடையவும் காரணமாகும். இது அனேகமாக விடுதலைப் புலிகளால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட - வாகனங்களுக்கு எதிரான — 8 முதல் 10 கிலோ அதியுயர் வெடிப்பொருளைக் கொண்ட வெடிகுண்டாக இருக்கலாம்.

2. நிலத்துக்குக் கீழ் புதைக்கப்பட்டிருந்த இந்த வெடிகுண்டின் அமுக்கத் தட்டுக்கு மேலாக வாகனத்தின் இடது புற பின்சில்லு சென்றதால் ஏற்பட்ட அமுக்கம் காரணமாக அது அனேகமாக வெடித்திருக்கலாம்.

3. இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்து நீண்ட காலம் (முப்பது மாதங்கள்) கடந்துவிட்டதால் அராலித்துறைப் பகுதியிலிருந்து சட்ட மருத்துவ அல்லது தொழில் நுட்ப சான்றுகள் எதனையும் பெறமுடியவில்லை.

இந்த வாகன வெடிகுண்டு ''ரிமோட்'' கட்டுப்பாடு மூலமோ அல்லது வானொலி கட்டுப்பாடு மூலமோ இயக்கப்பட்டதற்கான சாத்தியம் ஏதும் இல்லை. ஆனால் அத்தகைய முறை இடம்பெற்றதற்கான வாய்ப்பு கொஞ்சமும் இல்லை என்று அடித்துக் கூறிவிட முடியாது.

4. சம்பந்தப்பட்ட வாகனத்தில் பொருத்தப்பட்ட குண்டு ஒன்றே வெடித்தது என்று காட்டுவதற்கு தொழில் நுட்பச் சான்றுகள் எதுவும் இல்லை.

—இவ்வாறு ரட்மோர் தமது இறுதி அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். அது 1995 பெப்ரவரி 20 ஆம் திகதியிடப்பட்டு விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் இந்த அறிக்கை சமர்ப்பித்து ஒன்றரை வருடமாகியும் அது ஒரு சான்று ஆவணமாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

தனது சோதனைகளையும் பரீட்சார்த்த வெடிகுண்டுத் தாக்குதல்களையும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் முன்னிலையிலேயே சம்பந்தப்பட்ட நிபுணர் மேற்கொண்டார். ஆனாலும் அவரின் விசேட அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை; அடியோடு மறைக்கப்பட்டுவிட்டது.

அந்த அறிக்கையில் புலிகளே வெடிகுண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் —

அதற்கு மாறாக 'அதிகாரப் பசியுடைய துரோகிகளே' இக்குண்டு வெடிப்புக்கு காரணம் என்று கூறும்படியான சாட்சியங்களும், ஆவணங்களும் ஆணைக்குழு முன் வைக்கப்பட்டு அவை பெரிதாகப் பிரசாரப்படுத்தப்படுகின்றன.

இதே பாணியில் பாதுகாப்புப் பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தை பல இடங்களில் ஆற்றிய உரை அரசு சார்பு பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டும் வருகின்றது.

இதே தொனியில் ஆணைக்குழு முன் அளிக்கப்பட்ட சில சாட்சியங்கள் பெரும் அளவில் பிரசாரப்படுத்தப் பட்டதால் கொப்பேகடுவவுடன் உயிரிழந்த மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணவின் சிலை தென்னிலங்கையில் சரித்து வீழ்த்தப்பட்டது.

- இவ்வாறு அந்தப் பத்திரிகை சுட்டிக் காட்டியது.

(உ)

# கீழ்மட்ட ராணுவ அதிகாரிகள் மீது பழிசுமத்தவே விசாரணைக் குழு!

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடிந்தாலும் அதன் பின்னர் பிடித்த இடங்களைப் பாதுகாப்பதற்கு இராணுவத்திலுள்ள ஆளணி போதுமானதாக இல்லை என்பதால் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதில் அவசரம் காட்டுவது நல்ல பலனை அளிக்காது என அவர் தெரிவித்திருந்தார்.

இக்காரணத்தினால் 24 மணித்தியாலங்களுக்குள் அவர் கொழும்புக்கு மாற்றப்பட்டார். அப்போது இராணுவத் தலைமையகத்தில் தலைமை நிலை அதிகாரியாகப் பணியாற்றிய தற்போதைய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் டீறாஹான் தளுவத்த வடக்கு -கிழக்கு இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்டதுடன் எந்த விதத்திலாவது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும் என அவருக்குக் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது.

### முல்லைத்தீவு சம்பவத்துக்கு பொறுப்பு யார்?

அந்தத் தூரதரிசனமற்ற செயற்பாட்டின் விளைவு முல்லைத்தீவு துன்பியல் சம்பவத்தைமுக்கியமாகக்கொண்டு நீண்டு கொண்டேபோகிறது.

இதன்படி அவதானிக்கும் போது முல்லைத்தீவு சோக நிகழ்வுக்கு பொறுப்பானவர்கள் யார் என்பது மக்களுக்கு தற்போது தெளிவாகிறது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்ற சாட்டில் இரு ஜெனரல்கள் உருவானார்கள் என்பதைக் அனைவரும் அறிவர். அந்த ஜெனரலும் லெப். ஜெனரலும் முல்லைத் தீவு சோக நிகழ்வுக்கான பொறுப்பைக் கீழ் மட்ட அதிகாரிகள் மீது சுமத்தி தமது பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பதற்காக இராணுவ விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

> முல்லைத்தீவு தாக்குதல் தொடர்பாக ''சமுராயி'' என்பவரால் எழுதப்பட்டு ''லக்பிம'' சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் ஒரு பகுதி ''முல்லைத்நிவு தாக்குதலை அடுத்து வீடு செல்லவுள்ள ஜெனரல் யார்?', என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளிவந்தது. இன்று இறுதிப் பகுதி வெளியாகிறது.

இவ்வாறு இராணுவ விசாரணைக் குழுவை நியமிப்பது இராணுவச் சட்டத்தின் படி சரியானதே ஆகும். இருப்பினும் இராணுவத் தளபதி மீது குற்றம் சுமத்தப்படாமல் கீழ் மட்ட அதிகாரிகள் மீதே சுமத்தப்படுகிறது.

அதிற்கூடத்தவறில்லை. ஆனால் இவ்வாறான நிகழ்வுகளுக்கான பொறுப்பு எப்போதும் கீழ் நிலை அதிகாரிகள் மீதல்லவா சுமத்தப்படுகிறது.

பூநகரி முகாம் மீதான தாக்குதல் பற்றி கவனத்தில் எடுக்கும் போது, பூநகரி இழப்பு தொடர்பாக பொறுப்பேற்க வேண்டும் என தற்போதைய இராணுவத்தளபதி மீதும் இராணுவ விசாரணைக் குழுவினால் குற்றம் சுமத்தப்பட்டது.

அன்று அவர் பூநகரிக்குப் பொறுப்பாக இருந்த இரண்டாவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றினார்.

இன்று அவர் முழு இராணுவத்தினதும் தளபதியாக விளங்குகிறார், அன்று பூநகரி இழப்புக்களுக்குப் பொறுப்பேற்று பதவியை இராஜினாமாச்செய்தது இராணுவ விசாரணைக் குழுவால் குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகள் அல்ல. அப்போதைய இராணுவத் தளபதியே தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

பூநகரியில் சிப்பாய்கள் உயிரிழந்ததற்கு மாத்திரமல்ல, எதிரிகளால் இரு யுத்த டாங்கிகள் கைப்பற்றப்பட்டதற்கும் பொறுப்பேற்று பீரங்கிப் படைப் பிரிவின் தலைவர் என்ற வகையில் அப்போதைய இராணுவத் தளபதி பொறுப்பேற்று தனது பதவியை இராஜினாமாச் செய்தார்

### முல்லைத்தீவு தோல்வி பெரியது

அந்த வகையில் பார்க்கும் போது பூநகரியில் ஏற்பட்ட தோல்வியிலும் பார்க்க முல்லைத்தீவில் ஏற்பட்ட தோல்வி பாரியதொன்றாகும். பூநகரியில் ஏற்பட்ட உயிரிழப்புக்களை விட முல்லைத்தீவில் ஏற்பட்ட உயிரிழப்புக்களும் அதிகம். மேலும் முல்லைத்தீவில் இரு பீரங்கிகளும் இழக்கப்பட்டுள்ளன.

அவ்வாறெனில் இந்த இழப்புக்களுக்குப் பொறுப்பேற்று பதவியை இராஜினாமாச் செய்து வீட்டுக்குச் செல்லும் ஜெனரல் யார் என முழு நாடுமே இன்று எதிர்பார்த்த வண்ணமுள்ளது.

இதற்கிடையில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல்மொஹான் சமரசேகரா அண்மையில் தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்ல வேண்டிய நிலை தோன்றியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களில் செய்திகள் அடிபடுகின்றன.

முல்லைத்தீவு முகாம் தாக்குதலுக்கு உட்பட்ட வேளையில் மேலதிக உதவிப் படையணிகளை கடல்மார்க்கமாக கொண்டுசெல்ல முடியாமற் போனது குறித்த குற்றச்சாட்டிற்கும் — உட்பட்டுள்ள கடற்படைத் தளபதியின் சேவைக்காலம் இவ்வாண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இருப்பினும் தற்போது உருவாகியுள்ள சீரற்ற நிலைமை காரணமாக கடற்படைத் தளபதி குறித்த திகதிக்கு முன்னரே ஓய்வு பெற நேரிடலாம் எனக் கருதப்படுகிறது.

(இ - 10)

## இந்தியா...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை அனுப்புவதில் உள்ள பிரச்சினைகளும் புதுடில்லியில் இந்த உணர்வை மேலும் வலுப்படுத்துவதாகவே அமைகின்றன.

இக் கட்டத்தில் இலங்கையில் இருந்து மேலும் அகதிகள் தமிழகத்துக்கு வருவார்களேயானால், இது இன்றைய சூழ் நிலைக்கு உதவியாக இருக்கப் போவதில்லை என்பதை கொழும்பும், புதுடில்லியும் நன்கு விளங்கிக் கொண்டுள்ளன.

### எவ்வாறு தடுக்க முடியும்?

உண்மையிலேயே படகுகளில் இந்தியாவுக்கு செல்லுமாறு தமிழர்களை புலிகள் தான் நிர்ப்பந்திக்கிறார்கள் என்றால், அகதிகள் வருகையை இந்தியாவோ இலங்கையோ எவ்வாறு தடுக்க முடியும் என்பது இன்னொரு கேள்வியாகும்.

இராணுவ ரீதியில் நோக்குகையில், தற்போதைய நிகழ்வுப் போக்கு இலங்கை ஆயுதப் படைகளுக்கும், புலிகளுக்கும் ஓய்வைக் கொடுப்பதாகவும் அமைய முடியும்.

அண்மைக் காலத்தில் இலங்கைப்படையினர் முன்னேறுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளில் அவர்களுக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதால், நடவடிக்கைகளை நிறுத்தி நிலைகளை வலுப்படுத்திக் கொண்டு மக்கள் மீது கவனத்தைத் திருப்புவதற்கும் இது ஒரு வாய்ப்பாகவும் அமையலாம்.

### கருத்தொற்றுமை இல்லை

அரசியல் முனையிலோ, ஜனாதிபதி முன்வைத்திருக்கும் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் இல்லை. அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தின் தன்மை மற்றும் அதன் எல்லைகள் தொடர்பில் இரு பிரதான சிங்களக் கட்சிகளுக்கும் இடையே கருத்தொருமிப்பும் இல்லை. யாழ். குடாநாட்டில் எந்த விதமான அரசியல் நடவடிக்கையுமோ, திட்டமுமோ இல்லாத நிலையில், அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியமும் இல்லை.

இந்த நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் இராணுவ நடவடிக்கைகளோ, அல்லது தமிழர்களின் அவலங்களோ விரைவில் முடிவுக்கு வருவதற்கான சாத்தியப்பாடும் இல்லை. — இப்படி 'இந்து' கருத்து வெளியிட்டுள்ளது.

(உ - 3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மீசாலை - புத்தூர் சந்திக்கு மிக அண்மையில் 3 பரப்புக் காணிக்குள் சிறிய வீடு, கிணறு மற்றும் வசதிகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மணியம் ஸ்ரோர்ஸ், கண்டி றோட், சாவகச்சேரி. (சி- 2784)

வளர்ப்பு முயல்கள், பல நிறங்களில் குட்டிகளுடன் விற்பனைக்கு உண்டு. க. நாகராசா C/o. ஐங்கரன் களஞ்சியம், நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (42432)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், மாதவிடாய்குத்து, வலிப்பு, சரும நோய்கள், மூல மூத்திர ரோகங்களில் பிரபல மானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [42111]

## மீண்டும் ஆரம்பம்

குழந்தைகள், முதியவர்கள் அனைவருக்கும் சிறந்த சிகிச்சையளிக்கின்ற இல. 129, ஸ்ரேஷன் றோட் இரெட்ணம் வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் தனது பழைய இடத்திலேயே சேவையைத் தொடர்கிறது என்பதை அறியத் தருகிறோம். (42236

## காணவில்லை

கல்வியங்காட்டுச் சந்தியில் உள்ள நல்லூர் எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு அருகாமையில் எனது சிற்றிசன் கைக்கடிகாரம் (கறுப்புடயல்) தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நல்லூர் எரிபொருள் விற்பனை நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (42431)

அல்ஷேசன் (கறுப்பு), பொமரேனியன் (கறுப்பு) நிற நாய்களை காணவில்லை. கண்டவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பொ. சிங்கம் 59, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (42414)

## தேவை

யாழ். நகர மத்திய பகுதியில் 1500 சதுர அடிக்கு குறையாத விஸ்தீரணமுடையகளஞ்சிய வசதி கொண்ட கட்டடம் உடனடியாக தேவை. தொடர்பு: சரவணாஸ் அச்சகம், 233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (42405)

## ஆங்கிலம் / கணிதம்

Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 10, 9 உட்பட) கற்பிக்கப்படும். 10 வருட Paper Classes தினமும் பகல் 8- 12, பிற்பகல் 3- 6 வரை, London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (42342)

## என்வலப் விற்பனைக்கு

ஊனமுற்ற பிள்ளைகளினால் தயாரிக்கப்படும், மருத்துவக் கடிதவுறை (Medical Envelopes) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், 15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (சுண்டுக்குளி மகளிர் பாடசாலைக்கு முன்) (42426)

## திருமண சேவை

மல்லாகத்தில் இயங்கிய துர்க்கா திருமண சேவை தற்பொழுது மாயக்க பிள்ளையார் கோவிலடி தம்பசிட்டி, புலோலி மேற்கு, புலோலி. எனும் முகவரியில் இயங்குகிறது. நாவலர் றோட், பிறவுண் றோட் சந்தியில் புதனும், திங்களும் சந்திக்கலாம். படத்துடனும் குறிப்புடனும் வரவும். (42436)

## மலகூடம் அமைக்க நிதி உதவி

யாழ்ப்பாணம் ஒக. 28

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாக நீரடைப்பு மலசலகூடம் அமைக்க விரும்புவோருக்கு மாகாண சுகாதார பணிப்பாளரின் ஏற்பாட்டால் யாழ். மாநகரசபையால் நிதி உதவி வழங்கப்படுகின்றது.

பூர்த்தி செய்யப்பட்ட மலகூடத்துக்கு ஆயிரத்து 500 ரூபாவாகவும், மேற்தளம் அமைக்கப்படாத மலகூடத்துக்கு ஆயிரம்ரூபா வாகவும் உதவி வழங்கப்படுகிறது.

இந்த உதவியைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் யாழ் மாநகராட்சி மன்றத்தின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## விற்பனைக்கு வந்துவிட்டது

போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி விளக்க நூல்

**‘பொது அறிவு’**

- ★ அண்மைக்கால இலங்கை சர்வதேச நடைமுறை விடயங்கள்.
- ★ பல்துறைசார்தகவல்கள் அத்தியாயங்களாக.
- ★ 2 மாதிரி வினாத்தாள்- விடைகளுடன்.

ஆசிரியர்:
வே. தபேந்திரன் B. Com

● எல்லா பிரபல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(42258)

# உடுவில் மகளிர் கல்லூரி

உடுவில்

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்: **02—09—1996** திங்கள்
பி. ப. **2. 30** மணி

- ★ கலை முதற் தேர்வு ( G. A. Q. — 1997 ) பேராதனை, யாழ்ப்பாணம்.
- ★ B. A Part - I யாழ்ப்பாணம்
- ★ B. A பேராதனை, யாழ்ப்பாணம் (1996—1997)

பாடநெறிகள்

| | |
|---|---|
| பொருளியல் | அரசறிவியல் |
| தமிழ் | மெய்யியல் |
| இந்துநாகரிகம் | கிறிஸ்தவநாகரிகம் |

அடிப்படை ஆங்கிலம்

மாணவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
(சி/2802)

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரைகள் 2 ஆம் திகதி ஆரம்பம்

## இரு கல்வியாண்டுகளுக்கும் ஒன்றாக வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக. 28

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 94/95 கல்வியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகளும் — 95/96 கல்வியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகளும் — அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஒரே நாளில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இருகல்வியாண்டு மாணவர்களுக்கும் ஒன்றாகவே வகுப்புக்கள் நடத்த ஏற்பாடாகியுள்ளதாகவும் —

தற்போதைய சூழ்நிலை, போதிய மாணவர்கள் வரவின்மை, போதிய விரிவுரையாளர்கள் இல்லாமை ஆகிய காரணங்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும்—

ஆனாலும் 94/95 கல்வியாண்டு மாணவர்களின் மூப்பு சகல விடயங்களிலும் கவனத்தில் எடுக்கப்படும் என்றும் — பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளைதெரிவித்தார்

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமையாற்றிய

அமரர்

**லோறன்ஸ் செல்லத்துரை**

அவர்களின் மறைவையிட்டு அதிர்ச்சியும் கவலையும் கொள்கின்றோம்.

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ரூலின்ஸ் நிறுவனம்
6, நல்லூர் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம். (42433)

# நல்லூர் ப. நோ. கூ. சங்கம் விவசாயப்பண்ணை பராமரிப்பாளருக்கான விண்ணப்பம் கோரல்

கோண்டாவில் இருபாலை வீதியில் அமைந்துள்ள எமது விவசாயப்பண்ணையை, இப்பண்ணையிலேயே தங்கிப் பராமரிப்பதற்கு விவசாய அனுபவமும், தேக ஆரோக்கியமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயதெல்லை **20** தொடக்கம் **50**-க்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சம்பளம் தகைமைக்கேற்ப பேசித் தீர்க்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை **1996. 09. 05** ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பொதுமுகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு எழுத்துமூலம் அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகிறன்றார்கள்.

(சி/2805) பொது முகாமையாளர்

# முட்டை, கோழி எடுத்துவரத் தடை

நெடுந்தீவில் இருந்து முட்டை, கோழி ஆகியவற்றை வெளியே எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

யாழ். நகரில் இவற்றின் விலைகள் மிகக் கூடுதலாக இருப்பதால், உற்பத்தியாளர்கள் இவற்றை யாழ் நகருக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதில் ஆர்வங் காட்டி வந்தனர். இதனால் உள்ளூர் தேவைகளுக்கு இவை போதிய அளவு கிடைப்பதில்லை என பாவனையாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து நெடுந்தீவு பிரதேச சபை குறிப்பிட்ட பொருள்களை வெளியே எடுத்துச் செல்வதற்குத் தடை விதித்ததுடன் கருவாடு, ஆடு என்பவற்றுக்கு ஏற்றுமதி வரியும் அறவிட நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-111)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாது வருடம், ஆவணித்திங்கள் **16** ஆம் நாள் **(31 - 08 - 1996)** சனிக்கிழமை காலை **7-00** முதல் **8-10** மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **தயாளன்** | **ரூபாவதி** |
| (ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர், பருத்தித்துறை) | (சாந்தி) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

அல்வாய் வடக்கு இன்பருட்டிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம் மணமகன் இல்லத்தில் **(02 - 09 - 1996)** திங்கட்கிழமை காலை 10-30 மணியளவில் நடைபெறும்.

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. பொ. இராசதுரை
திருமதி சரஸ்வதி இராசதுரை
''ராஜன் சைக்கிள் வேக்ஸ்'',
வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

திருமதி ம. சிவசுப்பிரமணியம்
இன்பருட்டி, அல்வாய்.
தற்காலிக முகவரி:
மே/பா: பேராசிரியர்
வி. கே. கணேசலிங்கம்,
கந்தவுடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

இ:து இரு வீட்டார் அழைப்பாகும்.

தனிப்பட்ட அழைப்பு அனுப்ப இயலாமைக்கு தயவுசெய்து மன்னிக்கவும்.

(42412)

உதயன்

## யாழ். – கொழும்பு போக்குவரத்து

கடந்த ஜூலை மாதம் பதின்மூன்றாம் திகதிக்குப்பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையேயான கடல் மார்க்க, வான் மார்க்கமான போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

இதனால் கப்பல் மூலமும் விமான மூலமும் பயணம் செய்வதற்கெனப் பதிவு செய்து விட்டு, யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும், திருகோணமலையிலும் காத்துத் தவம் கிடக்கும் மக்களின் மொத்த எண்ணிக்கை 23,000 பேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வாறு காத்திருப்போர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கோ, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கோ உல்லாசப் பயணிகளாகச் செல்வதற்குப் பயணச் சீட்டுக் கேட்டு விண்ணப்பிக்கவில்லை!

தமது முக்கிய தேவைகளுக்காக, அவசர அலுவல்களுக்காக, வாழ்க்கை விடயங்களுக்காகவே அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்கும் பயணம் செய்ய மக்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

கப்பல், விமானங்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற காரணத்தைக் காட்டி, மக்கள் தமது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தடையாக இருப்பது ஏற்கக் கூடியது அல்ல

தமது சொந்தக் குடும்ப, வாழ்க்கைத் தேவைகள் கருதி மக்கள்இடத்துக்கிடம்போக்குவரத்துச் செய்வது அவர்களுக்குரிய பராதீனப் படுத்த முடியாத உரிமையாகும். எக்காரணங்கொண்டும் அது மறுக்கப்படினும் அது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில், கப்பல்களையும் விமானங்களையும் பாதுகாப்பாகச் செலுத்த முடியவில்லை என்பதற்காக மக்களின் போக்குவரத்து உரிமையை மறுப்பது முற்றிலும் நியாயமற்றது.

போர் தொடரும் வரை இத்தகைய பாதுகாப்பற்ற நிலைமை நீடிக்கவே செய்யும். போரை அடுத்த வருட இறுதி வரை தொடரப் போவதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். ஆகையால் யாழ். — கொழும்பு கப்பல், விமானப் போக்குவரத்துகளுக்கு பாதுகாப்பில்லாத தன்மைதொடரும் சாத்தியம் உண்டு.

கப்பல் விமானப் போக்குவரத்துக்களைப் பாதுகாப்பானவையாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். அது இயலாவிடில் மக்கள் போக்குவரத்துக்கான மாற்று வழி ஒன்றைக் கண்டு பிடித்தாக வேண்டும். அதுவும் முடியவில்லை, இதுவும் இயலவில்லை என்றால் அரசு திறமையற்றது, பலவீனமானது என்றாகிவிடும்.

அரசாங்கத்தின் இரண்டு ஆண்டு பதவிக்காலப் பூர்த்தியையொட்டி வெளியிடப்பட்ட விளம்பரத்தில் கூட, யாழ்ப்பாண மக்களின் மனங்களை வெல்வது அரசின் பிரதான பணிகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் வெளிமாவட்டப் போக்குவரத்துக்கு வசதி செய்யாமல் அவர்களை அவதிப்பட வைப்பதாலும் —

உள்ளூர் போக்குவரத்துக்குக் குந்தகம் விளைவிப்பதாலும் —

அவர்களின் வெறுப்பைத் தான் தேடிக்கொள்ள இயலுமே அன்றி நிச்சயமாக அவர்களின் மனங்களை வெல்ல முடியாது.

# அரசாங்க ஊழியர்கள் “ஓவர்ரைம்” செய்வதை நிறுத்துதல் வேண்டும்

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஒக. 28

''ஓவர்ரைம்'' செய்வதை நிறுத்தி எட்டு மணித்தியாலங்களில் வேலையைச் செய்து முடிக்க அரச ஊழியர்கள் முன் வர வேண்டும். இதற்கு அரச ஊழியர்கள் முன் வந்தால் நாடு இரு வருடங்களில் பொன் கொழிக்கும் பூமியாகி விடும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதுளையில் நடந்த சுதந்திரக் கட்சியின் கூட்டத்திலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றம் மக்களின் ஒன்றுபட்ட உழைப்பிலேயே தங்கியுள்ளது.

நாங்கள் ஒவ்வொருவரும் 8 மணித்தியாலம் உண்மையாக உழைக்க வேண்டும். ''ஓவர்ரைம்'' வேலை செய்வதை மறந்து விட வேண்டும்.

அத்தோடு சில இலவச போசனங்களையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார். (இ-3)

## 600 பேருடன் பயணிகள் கப்பல்

கொழும்பு, ஒக. 28

வவுனியாவில் தங்கியுள்ள அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்களாக 600 பேருடன் திருகோணமலையில் இருந்து கப்பல் ஒன்று காங்கேசன்துறைக்கு இன்று புறப்படவிருப்பதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

## கப்பலில் சீனி

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள 'ரீயூனியன்' கப்பலில் 500 மெற்றிக் தொன் சீனி எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் —

தற்போது அவை இறக்கப்படுவதாகவும்— செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சீனி இறக்கப்பட்டு நிவாரணங்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்கப்படவிருப்பதாகவும் —

தட்டுப்பாட்டு நிலை ஏற்படவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-5-3)

## பிளாஸ்டிக் கூரைச் சீலை எடுத்துவர அனுமதி இல்லை

மணிலா, ஒக. 28

வன்னிப் பெருநிலப்பரப்பில் வீடு வாசல்களின்றி மரநிழல்களிலும் வீதியோரங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் அகதிகளுக்கு என இரண்டு லொறிகளில் கொண்டு வரப்பட்ட பிளாஸ்டிக் கூரைச் சீலைகள் தாண்டிக்குளம் ஊடாக எடுத்து வர அனுமதிக்கப்படவில்லை என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

நீல நிறமுடைய இந்த பிளாஸ்டிக் கூரைச் சீலைகள் விமானத்திலிருந்து பார்க்கும் போது இலகுவில் புலனாக மாட்டா என்றும் —

எனவே வெள்ளை நிற பிளாஸ்டிக் சீலைகள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும் —

தெரிவிக்கப்பட்டதாக அந்தச் செய்தி ஏஜென்ஸி மேலும் குறிப்பிட்டது. (உ-3)

## 10 ஆயிரம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் ஜனாதிபதியைச் சந்திக்கும்போது இந்த விடயத்தை மீண்டும் எழுப்பும் என்றும் —

ஜனாதிபதியிடமிருந்து திட்டவட்டமான பதில் ஒன்றை வலியுறுத்திப் பெற்றுக்கொள்ள பிரதிநிதிகள் குழு முயற்சிக்கும் என்றும்—

கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

உத்தேச சந்திப்பு பற்றிய தகவலை ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா உறுதிப்படுத்தினார். ஆனால் அது எப்போது, எங்கு நடைபெறும் என்பதை அவர் வெளியிட மறுத்துவிட்டார்.

''அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீது இந்த மாதம் எமது கட்சியின் யாழ். மாவட்ட எம்.பிக்கள் ஒன்பது பேரும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்து ஒத்துழைப்பை வெளிப்படுத்தினர். ஆனால் இந்த வாரம் ஜனாதிபதியுடன் நடக்கும் சந்திப்பால் பலன் கிட்டாவிட்டால் அடுத்த ஐந்தாம் திகதி மீண்டும் அவசரகாலச் சட்டம் நாடாளுமன்றத்துக்கு வரும்போது எமது எம்.பிக்கள் அதை எதிர்த்து— அரசுக்கு எதிராக—வாக்களிப்பார்கள்''— என்று திரு. தேவானந்தா சொன்னார்.

''அரசிடமிருந்து எமது மக்களுக்காக எதனையும் பெற்றுக் கொடுக்க முடியாவிட்டால் மக்கள் முகத்தில் நாம் விழிப்பது எப்படி?

''தெற்கிலிருந்து மக்கள் வெள்ளத்தை வடக்கே கொண்டு போய் நிரப்புவதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்க சிலர் முயன்று வருகின்றனர்.

''இந்த விடயத்தில் அரசின் உத்தியோகபூர்வ முடிவை ஈ. பி. டி. பி. பிரதிநிதிகள் குழுவிடம் ஜனாதிபதி உத்தியோகபூர்வமாகத் தெரிவிப்பார் என நாம் எதிர்பார்க்கிறோம்.''

- இவ்வாறு தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியை ஈ. பி. டி. பி. குழு சந்திக்கும் போது நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸும் உடனிருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குடாநாட்டில் சாதாரண தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் —

அங்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் —

ஈ. பி. டி பியின் ஒன்பது எம். பிக்களும் சம்பந்தப்பட்டதான இடைக்கால நிர்வாகம் ஒன்றை அரசு அமைக்க வேண்டும் என்றும் தேவானந்தா வலியுறுத்தி வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையற்றிருக்கும் போது சமூர்த்தித் திட்டத்தின் கீழ் தெற்கிலிருந்து வேறு ஆட்களை தொண்டர்கள் என்ற பெயரில் அனுப்புவது தேவையற்றது என ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் தெரிவித்தனர்.

பல தமிழர்கள் பாதுகாப்பு அதிகாரிகளால் இம்சைப் படுத்தப்படுவதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

தென்பகுதி இளைஞர்கள் பத்தாயிரம் பேரை வடக்கே அனுப்பும் அரசின் திட்டத்தை கடந்த மாதம் 12 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, எஸ். பி திஸநாயக்கா, பிரதி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஆகியோர் கூட்டாக வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## நல்ல மருந்து தரும் நல்லூரான்

நல்ல மருந்தொரு குரு மருந்தை நான்
நல்லூரில் கண்டேனே
எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து
இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழை அடியார்க் கிரங்கு மருந்து.

— யோகர்சுவாமிகள்

## எங்கள் துணையே சரணம்!

நல்ல நினைவே நாளும் சேர்த்து
நலமே எங்கும் வளர்க்கும் பதியாம்
நல்லை தனையே நயந்து நாடி
நிறைந்து பொலியும் கோயில் கொண்ட
வல்ல வேலுடைக் குமரா கந்தா
வஞ்சியர் இருவர் சூழ விளங்கும்
எல்லை இல்லாக் கருணைக் கடலே
என்றும் எங்கள் துணையே சரணம்!

நாயன்மார்கட்டு— ப.மகேந்திரதாசன்

## புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் நிரோஷன் பெர்னாண்டோ.

யாழ்.நகரில் நிலை கொண்டுள்ள 512பிரிகேட் படையணியைச் சேர்ந்த அவர் எமது செய்தியாளரிடம் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

★ புலிகள் இயக்கத்துடன் அல்லது பயங்கரவாதச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தாமாகவே முன் வந்து சரணடைவதற்கு வசதியாக எமது பிரிக்கேட் முன்றலில் (வெலிங்டன் சந்தியில்) சிவில் விடயங்களுக்கான அலுவலகம் ஒன்றை நாம் திறந்துள்ளோம். இத்தகைய தொடர்புடையவர்களை பெற்றோர்களே கூட்டி வந்து எம்மிடம் ஒப்படைக்கலாம், நாம அத்தகையோரின் தொடர்புகள், பங்களிப்பு ஆகியவற்றை விசாரித்தறிந்து பதிவு செய்துவிட்டு அவர்களை விடுவித்து விடுவோம். வீண் சிரமங்கள் தவிர்க்கப்பட்டுவிடும்.

★ எமது சிவில் விடயங்களுக்கான அலுவலகம் தினசரி காலை 9 மணி முதல் 7 மணி வரை இயங்கும்.

மேலதிகாரிகளை இந்நேரங்களில் எப்போது வேண்டுமானாலும் பொது மக்கள் வந்து சந்தித்து தமது பிரச்சினைகளைத் தெரிவித்துத் தீர்வு காணலாம். ஆனால் தேவையற்ற சிறிய விடயங்களுக்கும் அதிகாரிகளைச் சந்திக்க வந்து தங்கள் நேரத்தையும் அவர்கள் நேரத்தையும் பொதுமக்கள் வீணடிக்காமல் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

★ வலிகாமத்துக்கு மக்கள் மீண்டும் திரும்பி வந்த போது சில குடும்பங்களுக்குள் விடுதலைப்புலிகள் பலவந்தமாக தமது ஆட்களைப் புகுத்தியிருப்பதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அந்த ஆள் அக்குடும்பத்தைச் சேர்ந்த நபர் போல் நடித்துக் கொண்டு புலிகளின் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்.

இத்தகையோர் குறித்து அத்தகைய குடும்பங்களைச் சேர்ந்தோர் தாமாக முன் வந்து தகவல்களைத் தந்தால் அக்குடும்பங்களுக்கு அவலம் நேர்வதைத் தவிர்க்கலாம். இத்தகைய தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும். தகவல் தருவோர் பற்றிய விவரம் பகிரங்கப்படுத்தப்படமாட்டாது.

★ சில தனியாரின் இடங்கள், வீடுகளில் அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பது பற்றிய தகவல்களும் எமக்குக் கிடைத்துவருகின்றன. அத்தகைய ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பது அல்லது ஒளிக்கப்பட்டிருப்பது குறித்து எமக்கு முன் கூட்டியே தகவல் தந்தால் வீண் சிரமங்கள், அலைச்சல்கள், பாதிப்புகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

★ தமது பிள்ளைகளைச் சரியான வழியில் நடத்துவதில் பெற்றோருக்கு முக்கிய பங்கு உண்டு. கல்வியின் பாலும், விளையாட்டுக்கள் மற்றும் நல்ல பொழுது போக்கு அம்சங்கள் போன்றவற்றிலும் பிள்ளையின் கவனம் திரும்புவதைப் பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் வன்முறைப் பக்கம் அவர்கள் திரும்புவதைத் தவிர்க்கலாம்.

★ பயங்கரவாதச் சம்பவங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து மக்கள் எமக்கு அவ்வப்போது உரிய தகவல்களைத் தந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தனிப்பட்ட குரோதங்களுக்காக பொய்த் தகவல்களைத் தயவு செய்து அநாமதேயமாகத் தந்து படையினருக்கும், தனிப்பட்டோருக்கும் தேவையற்ற சிக்கல்களைக் கொடுக்க வேண்டாம் என்று தயவுடன் கோருகின்றோம். உங்களுக்கு உண்மையில் தெரிந்த தகவல்களை மட்டும் தெரிவித்து ஒத்துழையுங்கள்.

★ எமது படையினர் எந்த இடத்திலும் சிவில் உடையில் இயங்கவில்லை; இயங்க மாட்டார்கள்; அதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

★ நாட்டில் சமாதானம், அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் இராணுவத்தால் தனித்து வெற்றி காணமுடியாது. அதற்குப் பொதுமக்களின் முழு ஒத்துழைப்பு அவசியம். எத்தனை ஆயிரம் இராணுவத்தையும் கொண்டு வந்து குவிக்கலாம். ஆனால் பொதுமக்கள் ஒத்துழைப்பின்றி எதனையும் எட்ட முடியாது. எனவே அமைதிக்கும் சமாதானத்துக்கும் எதிரானவர்கள், சம்பவங்கள், செயல்கள் போன்றவை பற்றிய தகவல்களை மக்கள் எமக்குத் தெரிவிக்க வேண்டும்.

நாம் எமது கடமையைச் செய்யும் போது மக்களும் தங்களுக்குரிய கடமையை உணர்ந்து செய்ய வேண்டும்.

தகவல்களை நேரில் வந்து தருவதில் உங்களுக்குச் சிக்கல் இருக்குமானால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஏதேனும் ஒரு தொலைபேசியில் இருந்து 2225 என்ற இலக்கம் மூலம் எம்முடன் தொடர்பு கொண்டு அவற்றைத் தெரிவிக்கலாம். (உ)

# யாழ். மருத்துவப்பட்டதாரி மாணவருக்கு உள்ளகபயிற்சி

அண்மையில், காலந்தாழ்த்தி நடத்தப்பட்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பட்டதாரிகளுக்கான இறுதிப் பரீட்சையில்சித்தியடைந்தோருக்கு இன்று கொழும்பில் உள்ளகப் பயிற்சிக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

ஒட்டு மொத்த திறமைப் பட்டியலின் அடிப்படையிலேயே அவர்களுக்கு உள்ளகப் பயிற்சிக்கான நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் —

அந்த அறிக்கை ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் — சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு 10 இல் உள்ள டி சேரம் பிளேசில் (இல.231) அமைந்துள்ள குடும்ப சுகாதார நிலையத்தின் கேட்போர் கூடத்துக்கு இன்று காலை 9-00 மணிக்கும் 12-00 மணிக்கும் இடையே வந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பட்டதாரி மாணவர்களுக்கு சுகாதார அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகப் பதிவுச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியன வற்றை எடுத்துவருமாறு விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட இறுதியாண்டுப் பரீட்சை முடிவுகள் வெளியாகிய பின்னர் ஒட்டு மொத்த திறமைப் பட்டியல் மீளமைக்கப்பட வேண்டுமெனவும் —

இந்த மாணவர்களின் சேவை மூப்பு பாதிக்கப்படாமல் இருப்பதை சுகாதார அமைச்சு உறுதிப்படுத்த வேண்டுமெனவும் — யாழ். மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் தாக்கல் செய்த மனித உரிமை மனு மீது உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது தெரிந்ததே (இ-10)

## சசிகலாவுடனான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு சுதாகரன் தனது வளர்ப்பு மகன் இல்லை என்பதை அதிகாரபூர்வமாகத் தெரிவித்துக் கொள்வதாகவும் செல்வி ஜெயலலிதா கூறியிருக்கின்றார்.

திரு. சுதாகரனைச் சட்டபூர்வமான முறையில் வளர்ப்பு மகனாகவோ அல்லது சுவீகாரப் புத்திரனாகவோ தாம் ஏற்றிருக்கவில்லை என்றும்—

வாய்மொழியாகவே வளர்ப்பு மகன் என்று தாம் அறிவித்திருந்ததாகவும்—ஜெயலலிதா விளக்கமளித்திருக்கின்றார்.

கடந்த பொதுத் தேர்தலில் கட்சி பெருந் தோல்வியைச் சந்தித்ததற்கு சசிகலாவும் அவரது குடும்பத்தினருமே காரணம் என்று குற்றஞ்சாட்டி ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தமக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். (இ-5)

## வவுனியாவுக்குள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயக்க உறுப்பினர் என்று மற்றுமொரு செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இச்சம்பவத்தை அடுத்து வவுனியாவில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. அங்கு ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை உடன் ஆரம்பித்ததாகவும் —

சந்தேகத்தின் பேரில் பலர் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும்—

மேலும் அறிவிக்கப்பட்டது. (உ-3-10)

## சமய நிகழ்ச்சிகளில்

இன்று பூரணை தினமாகும். அம்மன் ஆலயங்கள் பலவற்றில் இன்று திருவிளக்குப் பூசை நடைபெறுகிறது.

கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ அம்மன்- ஐயனார் ஆலயம் உரும்பராய் ஸ்ரீபர்வதவர்த்தினி அம்பாள் ஆலயம் ஆகிய கோயில்களிலும் திருவிளக்குப் பூசை நடைபெறும். (அ-30)

★ ★ ★

நல்லூர் சிவன் கோயிலில் கமலாம்பிகை அம்பாளுக்கு இன்று பி. ப. 4 மணிக்கு ஸ்ரீ சக்கர யந்திர பூசை சிறப்பாக நடைபெறும். (அ-30)

## சங்கீதமாணி நடனமாணி விண்ணப்பம்

யாழ். பல்கலைக்கழக 95/96 கல்வியாண்டுக்கான சங்கீதமாணி, நடனமாணி, மற்றும் சங்கீதமாணி, நடனமாணி (டிப்புளோமா) ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி ஆகும்

செய்முறை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் 6ஆம் திகதியும், 7ஆம் திகதியும் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கின்றன. (இ-3)

## கம்பளையில் 25 பேர் கைது!

கொழும்பு, ஒக. 28

கம்பளை நகரில் உள்ள தமிழ் கடைகளில் தேடுதல் நடத்திய படையினர் 25 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

இவர்கள் அனைவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## விடைத்தாள்: கொழும்புக்கு அனுப்ப முயற்சி

திருகோணமலை, ஒக. 28

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த ஜூலை மாதத்தில் நடத்தப்பட்ட விசேட ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களைக் கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக கல்வி அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று கிளிநொச்சிக்கும் முல்லைத்தீவுக்கும் இவ்வாரத்தில் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு பிரதேசங்களிலிருந்தும் விடைத்தாள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படாததால், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட விடைத்தாள்களைப் புள்ளியிடும்பணியும் இன்னும் ஆரம்பிக்கப்படாதிருக்கிறது. (இ-150)

# உதவி வைத்தியர்கள் அரச எதிர்ப்புப் பேரணி

கொழும்பு, ஒக. 28

உதவி வைத்தியர்களும், பதிவு செய்யப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களும் கடந்த புதன்கிழமை கொழும்பில் அரச எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தினர்.

இந்தப் பேரணியில் எழுப்பப்பட்ட சுலோகங்களில் அவர்களின் கோரிக்கைகளிலும் பார்க்க பட்டதாரி வைத்தியர்கள் (டாக்டர்கள்) மீது குற்றஞ்சாட்டி எழுப்பப்பட்ட சுலோகங்களே அதிகமாக இருந்தன என பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள கிராமப்புற மக்களுக்கு உதவி மருத்துவர்களின் சேவையே கிடைக்கிறது. கிராமங்களுக்கு உதவி மருத்துவர்கள் மட்டுமே நியமிக்கப்படுகிறார்கள்.

ஆனால் அரசாங்க சேவையிலுள்ள டாக்டர்கள் பெரும்பாலும் நகரங்களிலேயே பணியாற்றுகிறார்கள் இந்தநிலை மாற்றப்பட வேண்டும் என்று உதவி வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது சங்கத்தின் உறுப்பினர்கள் பணியாற்ற கிராமங்களுக்கு செல்ல மறுத்தால் கிராம மக்களைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள் என கேள்வி எழுப்பி உள்ளார் உதவி வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் திலக் பெர்னான்டோ.

இதற்கிடையில் சுகாதார அமைச்சினால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு தாதிமார்களிலும் பார்க்க அதிக சம்பளம் வழங்கப்படுவதாகவும் —

இந்த முரண்பாடு நீக்கப்பட வேண்டுமெனவும் — அரச தாதிமார் சங்கத்தின் தலைவர் முறுத்துட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பள முரண்பாடுகள் பற்றி ஆராய ஒரு குழுவை நியமிப்பதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்ததாகவும் —

ஆனால் அந்த வாக்குறுதியை ஜனாதிபதி கௌரவிக்காத காரணத்தினால், தமது சங்க உறுப்பினர் நேரடி நடவடிக்கையில் இறங்க வேண்டிய வேளை வந்துள்ளது எனவும் ஆனந்த தேரர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த அரசின் சுகாதார அமைச்சின் பல்வேறு பிரிவுகளில் இதுவரை 25 வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றுள்ளன.

அண்மையில் மேலும் பல வேலை நிறுத்தங்ன் ஏற்படக் கூடிய அறிகுறிகள் தென்படுவதாக பி. பி சி. செய்தியாளர் தெரிவித் தார். (இ-10)

## வாதுவவில் வெங்காயம் புகையிலை

யாழ்ப்பாணம், ஒக. 28

இன்று கொழும்பு நோக்கிப் புறப்படும் 'வாதுவ' கப்பலில் 475 மெற்றிக் தொன் உள்ளூர் பொருள்களான வெங்காயம், புகையிலை, பனங்கட்டி ஆகியன எடுத்துச் செல்லப்படுகின்றன. (இ-3)


போலியோ...

...அது பொல்லாத வியாதி.
உங்கள் குழந்தைகளுக்கு
அந்த வியாதி வராமல்
தடுக்க வழியுண்டு.

செப்ரெம்பர் 7 ஆம் திகதியை
நினைவில் வைத்திருங்கள்

PolioPlus



யாழ். மாவட்ட விவசாயிகளே!

உங்கள் விவசாயப் பயிர்களுக்கு
"லங்கெம்"
விவசாய இரசாயன கிருமி நாசனிகளை
இன்று முதல் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

துர்க்கா களஞ்சியம்

125, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(42419)


# மரண அறிவித்தல்கள்

திருமதி

## வைத்திலிங்கம் சிவரத்தினேஸ்வரி

(ஈஸ்வரி)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட், 237ஆம் இலக்கத்தில் வசித்தவரும், தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி வைத்திலிங்கம் சிவரத்தினேஸ்வரி 23 - 08 - 96 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொறியியலாளர் வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சியாமளாசக்தி, பிரேமலாசாந்தி, மேகலாயோகினி, சிற்கலாயாழினி, சித்தானந்தசிவம், சிவகலாபாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr ஜெயவிக்கிரமராசா, Dr. சிறிகாந்தா, செந்தில்வேள் (அறங்காவலர்), Dr, ஆனந்தகுமார், வரதராசா (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23 - 08 - 96 இல் கொழும்பில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. பொன்னுத்துரை

(42443)

## முடியப்பு லோறன்ஸ் செல்லத்துரை

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த முடியப்பு லோறன்ஸ் செல்லத்துரை 20- 08- 96 அன்று கிளிநொச்சியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முடியப்பு எலிசபேத் தம்பதிகளின் அன்பு மகனும், மாகிறேற்றின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெரால்ட் மற்றும் அருட் தந்தை றெனால்ட் O. M. I கொன்ரால்ட், றெனோ ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, மரியம்மா, தெரேசம்மா, அந்தோனிப்பிள்ளை(எயர் சிலோன்), மாகிறேற் மற்றும் றீற்றா, அருட் சகோதரி வில்விறட் ( Little Flower Convent பம்பலப்பிட்டி ) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் 30-08-96 வெள்ளிக்கிழமை மாலை 5.30 (புதிய நேரம்) மணிக்கு இரங்கற் திருப்பலி இடம்பெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
ம. யேசுதாசன்
(மருமகன்)

புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(42441)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 28-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.